Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

6

# நாட்டிய நாடகம்

அ.சுஜாதா[1] & முனைவர். வெ.பாலா[2]
[1] பரதநாட்டிய ஆசிரியை,மாவட்ட அரசு இசைப்பள்ளி, கரூர்
chinnamanur.sujatha@gmail.com
[2] முதல்வர் (ஒய்வு).
ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம் இசைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை.

**ஆய்வுச்சுருக்கம் :**

'நாத! நாத! என்று அழுது அரற்றி
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்
பதஞ்சலிக்கு அருளிய பரமநாடக என்று
இதம் சலிப்பு எய்த நின்று ஏங்கினர் ஏங்கவும்"

திருவாசகம் - 8ம் திருமுறை
பதி -2 கீர்த்தித்திருவகவல்

மாணிக்கவாசகரின் திருவாசகம் பாடலின் கூற்றுப்படி 'பரம நாடக" என்று சிவபெருமானைப் பாடுகின்றார். அதுமட்டுமல்லாது வேறு சில பதிகங்களிலும் பாடியுள்ளார். அடிகளாரின் பாடல்களின்படி அந்த தில்லைக்கூத்தனே நாடகங்களுக்குத் தலைவன் என்பதை அறிய முடிகின்றது.

இறைவனின் திருவிளையாடல்கள். புராண இதிகாசங்கள், சமுதாயக் கருத்துகள், போன்றவற்றை இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் ஒன்றாக இணைத்து வெளிப்படுத்துவதே நாட்டிய நாடகம் ஆகும்.

'நாரதர் வீணை நயந்தெரி பாடலும்
தோரிய மடந்தை வாரம் பாடலும்
ஆயிரம் கண்ணோன் செவியகம் நிறைய
நாடகம் உருப்பசி நல்காள் ஆகி"

என்கிறார் இளங்கோவடிகள்.

பரதரின் நாட்டிய சாஸ்திரம் நிகழ்த்துக்கலைகள் (நாட்டியம்) பற்றிய சமஸ்கிருத நூலாகும். இதன் ஆசிரியர் பரதமுனிவர் ஆவார். நாட்டிய சாஸ்திரம் 36 அத்தியாங்களைக் கொண்டதாகும்.

அபிநயத்திற்கு பரதரின் நாட்டிய சாஸ்திரம் ஒரு ஆதாரநூலாகும்.

பாறும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நான்கும் கலந்துனக்கு நான் தருவேன். கோலம் செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா....

என்று தமிழ்ப்புலவர் ஔவையார் 'சங்கத்தமிழ் மூன்றும் தா" என்று யானை முகத்தோனை வேண்டிப் பாடியுள்ளார்.

**முதன்மைச் சொற்கள்:** திருவாசகம், நாட்டியசாஸ்திரம், சிலப்பதிகாரம், குறவஞ்சி, மெய்ப்பாடுகள்

**முன்னுரை**

கலைகள் கற்பதன் மூலம் உளியால் செதுக்கிய சிலையைப்போல மனிதன் செம்மையடைகின்றான். அந்த வகையில் நாட்டிய நாடகங்களை நடிப்பவர்கள் கருத்துக்கள் வாயிலாக ரசிகர்களுக்கு செய்திகளை நல்ல இயல், இசை, நாட்டியம் மூலமாக எடுத்து இயம்புகின்றனர். இந்த நாட்டிய நாடகங்கள் வாயிலாக புராண இதிகாசங்கள் தமிழர் வரலாறு, விழிப்புணர்வு தேசப்பற்றி போன்ற செய்திகளை தற்காலச் சந்ததியினருக்கு எடுத்தியம்புவதால் முந்தைய கால வரலாறுகளை இதன் மூலம் அறிய முடிகின்றது.

**நாட்டிய நாடகம்**

பலர் ஒன்றுகூடி வெவ்வேறு கதாபாத்திரங்களை ஏற்று கதையை சித்தரித்து நிருத்தம், நிருத்தியம், அபிநயம் இவற்றின் மூலமாக வெளிப்படுத்துவர்.

நாடக அரங்கில் முறைப்படி திரைச்சீலைகள் அமைக்கப்பட்டு இருக்கும்.

**சூத்திரதாரன்**

நாடக அரங்கில் முதன் முதலில் மேளப்ராப்தி எனும் தோடைய மங்களம் பாடி விக்னேஷ்வரனை பிராத்தனை செய்து அதன்பின் சூத்திரதாரன் முன்வந்து நாடக நிகழ்வுகளைப்பற்றி கூறுவான்.

**கட்டியகாரன்**

அரங்கில் தோன்றி அனைவரையும் சிரிக்கவைத்து நாடகத்தை துவக்கி வைப்பவன். நாடகத்தில் முதலாக வருபவரை அறிமுகம் செய்பவன்.

**பிரவேச தரு**

கூத்துக் களத்தில் கதாபாத்திரங்கள் வரும்பொழுது பாடப்படும் நட்டுவனார். இசைப்பாடகர், இசைக் கருவிகள் வாசிப்பவர் அரங்கில் திரைக்கு மறைவில் அமர்ந்திருப்பர்.

**1. உள்தரு**

அரங்கில் திரைக்குப்பின் கதாபாத்திரத்திற்கு உரிய கலைஞர் அரங்கில் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாக நிற்பார்கள் அவர்கள் அரங்கில் வருகிறார்கள் என்பதற்கு பாடலைப்பாடுவார்கள்.

**2. வெளி தரு**

நாடக அரங்கில் நடிகர் அபிநயத்துடன் நடித்துத் தோன்றுவதைப் பாடுவது ஆகும்.

**3. பிரவேச தரு**

நாடகத் தலைவன், தலைவி போன்றோர் அரங்கில் அபிநயத்துடன் நடித்து வரும்போது பாடப்படுவதாகும்.

**4. சம்வாத தரு**

கதாபாத்திரத்திற்குரிய இருவர் கூற்றும், மாற்றமுமாக பேசும் அமைப்பைபாடும் தரு இசைப்பாடலாகும்.

**5. கைவார தரு**

நாடகத்தலைவனும் பாட்டுடைத் தலைவனுமானவர்களின் கீர்த்தி (புகழ்) பாடும் தரு அகும்.

**6. சோபன தரு**

நாடக முடிவில் நாடகத்தலைவனை வாழ்த்தி புகழ்ந்து பாடுவது. இவை ‘சோபனம்” என்ற

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

வரிகளில் முடியும்.

**7. மங்கள தரு**

நாடகம் முடியும் போது மங்களம் என்ற வரிகளில் முடியும்.

**8. சரணதரு**

இறைவனிடம் சரணடையும் விதமாக பக்தி மார்க்கமாக ‘சரணம்” என்று முடியும் பாடல் வரிகளைக் கொண்டதாகும்.

நாட்டிய நாடகங்களில் வரும் கதாபாத்திரங்கள்

1. சூத்திரதாரன் - நாடகத்தை முன் நின்று நடத்துபவன்
2. கட்டியகாரன் - கட்டியம் கூறுபவன்
3. நாயகன் - இறைவனை நாயகனாக அல்லது மன்னர்கள்
4. நாயகி - மதனவல்லி, காமரசவள்ளி, மதனரதி
   ராஜமோகினி, வசந்த வள்ளி, மோகனவள்ளி,
   மோகனாங்கி
5. சகி அல்லது பாங்கி - நாயகியின் நெருங்கிய தோழி
6. குறவன் - குறமகன்
7. குறத்தி - குறமகள்
8. நூவன் - குறமகனின் நண்பன்
9. தூத்தா, தூத்தி - தூது செல்பவர்கள்

**குறவஞ்சி**

தமிழ்ப்பாடல்களை இசையுடன் பாடி அபிநயம் பிடித்து ஆடுவர். நூடகத் தமிழில் குறவஞ்சி ஒரு முக்கியமான ஒன்றாகும். குறவஞ்சியில் குறத்தி முக்கிய பாத்திரமாக இருப்பதால் குறவஞ்சி நாடகம் என்று பெயர் வரக்காரணமாயிற்று குறத்தி குறி சொல்லுதல் குறவஞ்சியில் வரும் பல செய்திகளில் ஒன்றாகும்.

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலமும் உணர்ந்து திறம்பட உரைப்பது ‘குறத்திப்பாட்டு” என்று பன்னிருபாட்டியலில் சூத்திரம் ஒன்று உள்ளது. (218).

**குறம்**

ஒரு பெண் தலைவனைக் கண்டு காமுற்று அத்தலைவனது திருத்தோளைச்சேர்தல் தனக்கு வருமோ என்று வருந்தி நிற்கும் சமயம் குறத்தி ஒருத்தி குறி சொல்லத் தொடங்கி இன்ன இன்ன குறிகள் நிகழ்கின்றனவாதலால் நீ எண்ணியவாறு தலைவனைக் கூடுதல் விரைவில் நிகழும் என்று கூறுவதே குறம் கூறும் பொருள் ஆகும்.

தலைவி தலைப்பட்ட தலைவன் யார் என்றும் அவனை குறிப்பிட்ட காலத்திற்குள் நீ அடைவது உறுதி என்றும் குறத்தி குறி தேர்ந்து கூறுவதாகப் பாடல் பாடப்படும்.

முறத்திலிட்ட நெல்லை வகுத்துப் பார்த்துக் குறி கூறுவேன்.

(திருப்பாதிரிப்புலியூர் கலம்பகம்-74)

என்று தன் ஆற்றலையும், வழக்கத்தையும் கூறுதலும்,

‘என் குறி பொய்யல்ல

பொய்ப்பன புன் சமயத்து ஏதிலர் தம்மொழி”

(திருக்கலம்பகம்-60)

என்று தன் சமயத்தை உயர்த்தி பேசுவதாக இருக்கும்.

**குறவஞ்சியின் செய்யுள் அமைப்பு**

வெண்பா, கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் போன்ற இயற்றமிழ்ச் செய்யுள்களுடன் சிந்து, கீர்த்தனை, தரு போன்ற இசைப்பாடல்களும் விரவி வருமாறு அமைந்திருப்பது குறவஞ்சி நாடகம் ஆகும்.

**குறவஞ்சியில் என்வகை மெய்ப்பாடுகள்**

1. அவலச் சுவை - சந்திரன், குயில், மன்மதன், ஆகியவற்றை தலைவி விரகதாபத்தால் பழிக்கும் போது
2. நகைச்சுவை - குளுவன், நூவன் இவர்களுடைய பேச்சுக்களில் காணலாம்.
3. வியப்புச் சுவை - தலைவியின் வர்ணனை, பந்தாடல் போன்றவற்றில் காணலாம்.
4. அச்சச் சுவை - தலைவி மயங்கும் சமயத்தில் தோழிகளிடம் ஏற்படும் சுவையாகும்.
5. அழுகை - தலைவி, தலைவனைக் கண்டு மனம் உருகிப்பாடும் பொழுது
6. பெருமிதச் சுவை - குறியின் சிறப்பைக் குறத்தி கூறும்போது
7. வெகுளிச் சுவை - சிங்கன், சிங்கி உரையாடலின் போது
8. உவகை - குறத்தி தலைவனைப் பற்றி தலைவியிடம் குறி கூறும்போது

**தியாகேசர் குறவஞ்சி**

இராகம் : சகானா தாளம் : ஆதி

பல்லவி

மோகன ரேகை வந்தாள் - முத்து முத்தான
மோகன ரேகை வந்தாள்

அனுபல்லவி

மோகன ரேகை வந்தாள் முல்லை நகர வல்லி போல
நாகரீகந் தென் கமலை நாயகர் தியாகேசர் நாட்டில் (மோகன)

சரணம்

இராஜ மோகினியைத் தேடி இராஜயோகம் மிகும் தியாக ராஜர் மருவும் கமலை ராஜ சபைதனை நாடி (மோகன)

இராஜ மோகினி (தலைவி) மல்லிகை மலர்களைச் சூடி வருகிறாள். தியாகேசர் பவனி வருவதனைக் கண்டு காதல் கொள்கிறாள். காம வேதனையில் இனிய தென்றலையும், நிலவையும், மன்மதனையும் பழிக்கின்றாள். தோழி மோகன ரேகை எனும் பெயருடையாள் வருகின்றாள். இராஜ மோ

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கினி முகம் வாடி இருப்பதைக்கண்டு சகி காரணம் கேட்கிறாள். தலைவி தன் நிலையை எடுத்துக் கூறுகின்றாள்.

குறத்தி தோன்றி இராஜ மோகினிக்கு குறி கூறுகின்றாள் தியாகேசரின் வாசல் வளம் கூறுகிறாள். பின்பு குறத்தி குலப்பெருமை உரைக்கிறாள். மலைவளம் உரைக்கிறாள். பலபலவென பல்லி ஒலிக்கின்றது. பரிசுப் பொருட்கள் பெற்றுக்கொண்டு குறத்தி செல்கிறாள். குறத்தியைத் தேடி சிங்கன் வருகின்றான். சிங்கியைக் கண்டு கொள்கின்றான். சிங்கி பெற்ற பரிசுகளை அறிந்தான். பிணக்கு நீங்கி குறவனும், குறத்தியும் மகிழந்து மன்மதனும் இரதியும் போல வாழ்க என்று தலைவியை வாழ்த்திச் செல்கின்றனர். பின்பு மங்கலம் இடம் பெறுகின்றது. இவ்வாறு தியாகேசர் குறவஞ்சி முடிகின்றது.

தஞ்சை மராட்டிய மன்னர் காலத்தில் (1684-1712) தியாகேசர் குறவஞ்சி இயற்றப்பட்டது. நூல் எழுதிய புலவர் பற்றி அறிய முடியவில்லை. சிலர் முத்துக்கவிராயர் என்பர். மாணிக்க நாச்சியார் மரபில் வந்த திருவாரூர் கொண்டி மரபினர் பங்குனி மாத பிரம்மோற்சவ காலத்தில் தேவாசிரிய மண்டபத்தில் இக் குறவஞ்சியைப் பாடி நடித்து வந்தனர்.

**திருவாசகம்**

‘கழுதொடு காட்டிடை நாடகம் ஆடிக், கதி இலியாய்

உழுவையின் தோல் உடுத்து, உன்மத்தம் மேல் கொண்டு உழிதருமே”

திருவாசகம் 5-வது பதிகம் திருச்சதகத்தில் 7-வது பாடலில் மாணிக்கவாசகர் இறைவன் நாடகம் ஆடுவதைக் குறிப்பிடுகின்றார்.

நாடகத்தில் உன் அடியோர் போல் நடித்து, நான் நடுவே வீடு அகத்தே புகுந்திருவான். மிகப்பெரிதும் விரைகின்றேன்.

திருச்சதகத்தில் 11-வது பாடலில் குறிப்பிடுகின்றார். உன் அடியார்போல நான் நாடகம் நடித்தேன். உன் மேல் எப்போதும் உள்ளம் உருகும்படி என் மனத்தில் அன்பைத் தருவாய் என்று உருகுகின்றார்.

**நகவே தகுமெம் பிரானென்னை**

நீ செய்த நாடகமே” திருவாசகம், திருச்சதகம் - பாட-11

எம்பிரானே என்னை நீசெய்த நாடகம் நகைத்தற்கே தகுதியாயிருக்கின்றது என்று இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொண்ட நாடகத்தைக் குறிப்பிடுகின்றார்.

**சிலப்பதிகாரம்**

‘நாடகமேத்தும் நாடகக் கணிகை”

(சிலப்பதிகாரம் பதி-15)

என்று இளங்கோவடிகள் மாதவி நாட்டியம் ஆடுவதைக் குறிப்பிடுகின்றார். தனியாக ஒரு பாடலுக்கு மெய்ப்பாடுகளுடன் ஆடுவதை நாட்டியம் எனவும் ஏதேனும் ஒரு கதையைத் தழுவி வேடம் புனைத்து ஆடுவதை நாடகம் என்றும் குறிப்பிட்டு வந்துள்ளனர் ‘நாட்டியம், நாடகம்” இந்த இரண்டையுமே கூத்து என்று சொல்லே வழக்கில் இருந்துள்ளது.

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் கூத்து வகைகளைப் பற்றியும் நாடக நூல்களைப் பற்றியும் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**சிலப்பதிகாரத்தில் மேடை அமைப்பு**

மேடை அமைத்துக் கொள்வதற்குரிய தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

ஊரின் நடுவில் தேரோடும் வீதியில் மேடை அமைக்கப்பட வேண்டும்

**மேடையின் அளவு**

இருபத்து நான்கு அளவு கொண்டு மேடை அளக்கும் கோலின்படி ஏழுகோல் அகலமும் (35அடி) எட்டுகோல் நீளமும் (40அடி) ஒருகோல் உயரமும் (5அடி) மேடை அமைக்க வேண்டும்.

**மேடை விளக்குகள்**

தூண்களின் நிழல் மேடையில் விழாதவாறு அழகுடைய நிலை விளக்குகளை நாற்புறமும் நிறுத்துவர்.

'தூண்நிழல் புறப்பட மாண்விளக்கு எடுத்து"

(அர-வரி-108)

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை**

பண்டிதர் முதல் பாமரர் வரை பார்த்து ரசிக்கக்கூடிய கலை நாடக்கலை ஆகும். அவற்றை நாட்டிய நாடகங்களாக இயற்றி நடிக்கும்போது பார்ப்போர் மனதை பரவசப்படுத்தும். நாட்டிய நாடகங்கள் இயற்றுவது அவ்வளது எளிதல்ல எனினும் தமிழ்நாட்டில் புராண இதிகாசங்கள், குறவஞ்சி, வேலுநாச்சியார், தீரன் சின்னமலை, போன்ற நாட்டிய நாடகங்கள் இன்றளவும் புகழ்பெற்று வலம் வருகின்றன. நாட்டிய நாடகங்கள் நடத்துவதற்கு நிறைய பொருட்செலவு ஆகும்.

தமிழ்நாடு அரசு நாட்டியக்கலையை ஊக்குவிக்கும் பொருட்டு இயல்இசை நாடக மன்றம் நிதியுதவி அளித்து சிறந்த நாட்டிய நாடகங்களை அரங்கேற்றம் செய்வதற்கு ஆண்டுதோறும் ஊக்குப்படுத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**அடிக்குறிப்புகள்**

1. பொற்றாமரையும் திருவாசகமும் உரை : புலவர் மு.சன்னாசி, M.A.,M.Phil.,M.Ed., 2023 A.R.பப்ளிகேஷன்ஸ் - மதுரை

2. இசைத்தமிழ் அறிஞர்கள் - தொகுதி 2 முனைவர் சண்முக செல்வகணபதி முனைவர்.செ.கற்பகம் அனன்யா பள்ளிஷர்ஸ், தஞ்சாவூர்

3. குமாரலிங்கர் குறவஞ்சி டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம் திருவாண்மியூர்.

4. National Seminar on Indian Dance and Music – 8th, 9th Feb – 2007 KALAI KAVIRI COLLEGE OF FINE ARTS, Trichirappali

5.DPS – MIS https://www.dpsmisdoha.com நாடகக்கலை